1990 மார்ச் 31]

தென் ஆற்காடு மாவட்டம் கண்டமங்கலத்தில் ஒரு ஐ.டி.ஐ. நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலம் பகுதி என்பது, புதுவை மாநிலத்தினுடைய அண்டைப் பகுதியில் இருக்கக்கூடிய, தொழில் நகரங்கள் அடங்கியிருக்கக் கூடிய ஒரு பகுதி. இந்த அரசு படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற வகையிலே, ஒரு ஐ.டி.ஐ. தொடங்க உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலம் பகுதியிலே அதைத் தொடங்க இந்த அரசுக்கு உத்தேசம் ஏதும் இல்லை. ஏனென்றால், தென்னாற்காடு மாவட்டத்தில், 5 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களும், 10 தனியார் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களும் இருக்கின்ற காரணத்தால், புதிதாக அங்கு தொடங்க உத்தேசம் இல்லை.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு உத்தேசம் இல்லையென்றாலும் கூட, தென்னாற்காடு மாவட்டத்திலே இருக்கக்கூடிய மற்ற பயிற்சி நிலையங்களிலாவது, கூடுதலாக இடங்களை ஒதுக்கீடு செய்ய இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பரிசீலித்து, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கும் இடம் கிடைக்கின்ற வகையிலே, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீன் பிடிக்க பயன்படுத்தும் சாதனங்கள்.

*1315 திரு. இரா. மதிவாணன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீன் பிடிக்கப் பயன்படுத்தும் கட்டுமரம், வலை, நூல் மற்றும் விசைப் படகுகளுக்குத் தேவையான டீசல் போன்ற சாதனங்களை மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மானியத் திட்டத்தின் மூலமும், தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் நிதி உதவியுடனும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடனும் மற்றும் ஆதி திராவிடர் துறையின் சிறப்புத் திட்டங்கள் மூலமும் மீனவர்களுக்கு விசைப் படகு, கட்டு மரம், வலை நூல் இவை மானிய அடிப்படையில் வழங்கப்படுகின்றன. மீன்பிடி விசைப் படகுகளுக்குப் பயன்படுத்தப்படும் டீசல் மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, செங்கை-அண்ணா மாவட்ட கடற்கரைப் பகுதியில், விஷ சக்தி வாய்ந்த கழிவு நீர் கடலில் கலப்பதால், மீன் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசுக்குக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதுபற்றி இந்த அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்.

*5429 திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கற்பட்டு தொகுதியில் திருக்கழுக்குன்றம் யூனியனில் குழிப்பாந்தண்டலம் ஊராட்சியில் மீண்டும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு தொகுதி திருக்கழுக்குன்றம் யூனியன் குழிப்பாந்தண்டலம் ஊராட்சி மற்றும் அதைச் சார்ந்த 10 கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, குறைந்த பட்சத் தேவைக்கும் குறைவாக உள்ளதாலும் தற்போது இப்பகுதியில் உள்ள கால்நடைகளின் தேவைக்கு திருக்கழுக்குன்றம் கால்நடை மருத்துவமனை போதுமானதாக உள்ளதாலும் மீண்டும் இக்கிளை நிலையத்தினைத் துவக்குகின்ற உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.